விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 வைகாசி 10 றஜப் 29 இதழ் 100

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24—5—82

# இராணுவ ஜீப் சாரதி விபத்தில் பலி!

## ஐவர்படுகாயம்; ஒருவர்கவலைக்கிடம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்த ஜீப் ஒன்று மரத்துடன் மோதியதால், சாரதி உட்பட ஆறு இராணுவ வீரர்கள் காயமடைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் சாரதி மரணமானார்.

நான்கு இராணுவவீரர்களில் திலகரத்தின (20 வயது) என்பவர் ஆபத்தான நிலையில் ருக்கிறார். விஜயசிங்கா (27 வயது) சத்திரசிகிச்சைக் குட்படுத்தப்பட்டுள்ளார். ஜெயசிங்கா (24 வயது), பலநாயக்கா (24 வயது), நோட்டன் (43 வயது) ஆகிய மூவரும் சிறுகாயங்களுக்குள்ளாகி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இறந்த ஜீப் சாரதி வீரகம (24 வயது)வின் சடலம் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில்விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் மாங்குளத்திலிருந்து ஆனையிறவு இராணுவமுகாமுக்குத்

[8-ம் பக்கம் பார்க்க]

★ விமலராசாவை விடுதலை செய்யக்கோரி

# யாழ் பல்கலைக்கழக மாணவர் 3 நாள் உண்ணாவிரதம்!

## உருவப்பட திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகசிரேஷ்ட பொது அறையில் முன்னாள் புவியியல் துறைத்தலைவர் அமரர் பேராசிரியர் சோ. செல்வாநயகத்தின் உருவப்படத்தை துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இன்று மாலை திரைநீக்கம் செய்துவைப்பார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## வடக்கு கிழக்கில் ஒருலட்சம் கைஎழுத்து வேட்டை!

(யாழ்ப்பாணம்)

400 நாட்களாக இராணுவப் பாதுகாப்பில் இருக்கும் பல்கலைக்கழக மாணவன் அ. விமலராசாவை விடுதலை செய்ய வேண்டும் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த வேண்டும் அல்லதுபடிப்பதற்கு வசதிசெய்து கொடுக்க வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் மூன்று நாள் உண்ணாவிரதத்தை இன்று ஆரம்பிக்கின்றனர்.

இது சம்பந்தமாக யாழ் பல்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. கே. என். இராசநாயகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

''1981ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதியிலிருந்து விமலராசாவை விடுதலை செய்யவேண்டும், அல்லது விசாரணைக்குட்படுத்தவேண்டுமென்று கோரி ஜனாதிபதிக்கு யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் கடிதங்கள், தந்திகள் அனுப்பிவைத்தும் இதுவரை தீர்க்கமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

'கடந்த 12ம் திகதிதொடக்கம் வகுப்புகளை பகிஷ்கரித்து வருகின்றோம்.

''14-ம்திகதி வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்கலைக்கழக பாடசாலை மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்தனர்.

''17-ம் திகதி யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் 2,200பேரின் ஆதரவில் நடத்தினோம். ஆனாலும் எமது கோரிக்கைகுறித்து இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

''மக்கள் இயக்கங்களும் இந்த அநியாயத்தை தட்டிக் கேட்டபோதிலும் அதற்கும் அரசு பதிலளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்தே இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளோம்.

''உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக மற்றைய மாணவர்கள், மதகுருமார்,பள்ளிக்கூடமாணவர்கள், பல்வேறு அரசியல் கட்சி உறுப்பினர்கள், மாணவர் அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், மற்றும் பல்வேறு நிறுவன அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்வரென எதிர்பார்க்கின்றோம்.''

### கையெழுத்துவேட்டை

''வடக்கு,கிழக்கின் சகலபகுதிகளிலும் மாணவர்கள் வீடு வீடாகச்சென்று ஒரு லட்சம் கையெழுத்துக்கள் வாங்கவுள்ளனர் என்றும் ஒரு லட்சம் கையெழுத்து வாங்கியவுடன் ஜனாதிபதிக்கும், உயர் கல்வி அமைச்சர்க்கும் மகஜர்அனுப்பி வைக்கப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (மா)

## மாவட்ட ரீதியில் மீண்டும் ஆசிரியர் நியமனம்

### இவ்வாரம் நேர்முகப் பரீட்சை

[கரவெட்டி]

ஜி. சி. ஈ. உயர்தரம் சித்தியடைந்தவர்களில் இருந்து மாவட்ட ரீதியில் மேலும் ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இது சம்பந்தமாக யாழ் மாவட்டத்திற்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 2?, 27, 28ம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவிருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து 280 பேர் தோற்றி இருந்தும் 100 பேரே ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். என்பது குறிப்பிடத்தக்கது.

## "பொதுத்தேர்தலில் நாம் வெற்றிபெறுவது நிச்சயம்!"

### மட்டக்களப்பில் திருமதி சிறிமா

(மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரெட்னம்)

''அடுத்த பொதுத் தேர்தலில் எங்கள் கட்சிதான் ஆட்சி அமைக்கும். இது உறுதியாகிவிட்டது நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் காத்தான் குடி நெசவாளர்களுக்கும், யாழ். விவசாயிகளுக்கும் சுபீட்சமான எதிர்காலத்தை அமைத்துக்கொடுப்போம்.''

இவ்வாறு நேற்று முன்தினம் மட்டக்களப்பு காத்தான்குடி கடற்கரை மைதானத்தில், முன்னாள் பட்டின சபைத் தலைவர் ஜனாப். அகமட்லெப்பை தலைமையில் நடைபெற்ற பகிரங்கக்கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

விமானத்தில் வந்திறங்கிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் முன்னாள் அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரட்ன, நுவரெலியா எம். பி. திரு. அநுரா பண்டாரநாயகா ஆகியோர், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரி திரு. இராஜன் செல்வநாயகம் தலைமையில் பெருந்திரளான மக்களினால் வரவேற்கப்பட்டு மோட்டார் பவனியாக காத்தான்குடிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பொதுக்கூட்டத்தில் திருமதி பண்டாரநாயகா மேலும் கூறியதாவது:

''1978ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட புயலையடுத்து ஜனாதிபதி நிதி ஆரம்பிக்கப்பட்டது. ஜனாதிபதி நிதியிலிருந்து இம் மாவட்டத்தில் உருப்படியான வேலைத்திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கத்தின் பிரமுகர்களின் ஆடம்பரமான வாழ்க்கைக்கே இந்நிதி பயன்படுத்தப்பட்டது. பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரின் வெளிநாட்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## "உயிர்நீத்தவர்களுக்கு வீரவணக்கம்செய்வோம்"

(யாழ்ப்பாணம்)

''தமிழ்ஈழப் போராட்டத்தில் உயிர்துறந்தவர்கள்,காணாமற் போனவர்கள், சிறையில் இருந்து வாடுபவர்கள் நினைவு குறித்து சிரம்குவித்து வீரவணக்கம் செய்வோம்'' என்றுவண. பிதா சிங்கராயர் அடிகள், தேசிய வீரர்கள் நினைவு தினத்தை ஒட்டி தமிழ்ஈழவிடுதலை அணியினரால,நடாத்தப்பட்ட வீர வணக்கக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்திப்பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்ஈழவிடுதலை அணித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினமிரவு இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் பிற்பகல் 4 மணிக்கு, தமிழ் ஈழ விடுதலை அணியினர் டாக்டர் தர்மலிங்கம் தலைமையில், தந்தை செல்வா சமாதியில் மலர்தூவி அஞ்சலி செலுத்திவிட்டு, நினைவாலயத்தில் மௌனமாக இருந்து பிரார்த்தனை செய்தனர்.

திரு. ஈழவேந்தன், திரு. பொன். பூலோகசிங்கம், திரு. சே. செந்தூர்ராசா, திரு.கே. டேவிட்சன் உட்பட பலர் இப்பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

(7ம் பக்கம் பார்க்க)

சுதுமலை மர்மமரணம்:

## தேடப்பட்டவர் சரணடைந்தார்

[யாழ்ப்பாணம்]

சுதுமலை மேற்கைச் சேர்ந்த முத்துவேலு செந்தூர்வடிவேலு [31 வயது] மரணம் தொடர்பாக பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவந்த டாக்டர் கெங்காதரன், யாழ். பொலிஸ்நிலையத்தில் நேற்றுக்காலை சரணடைந்தார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 22ம் திகதி சுதுமலை அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வயல்வெளியில் இறந்தவரின் சடலம் கிடக்கக்காணப்பட்டது.

யாழ். உதவிப்பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராசாவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின்பேரில் இன்ஸ்பெக்டர் கே. கிருஷ்ணதாசன்

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## பயிற்சி

றேடியோ – டெலிவிசன் எயர்கொண்டிசனிங், வெல்டிங், HOTEL MANAGE. MENT FRENCH மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்26–5–82 அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல். அக்கடமி, மொம்சாக்கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3248

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள Morris Minor விற்பனைக்குண்டு தொடர்பு ''ஈஸ்வரி வாசம்'', 4, இணுவில் றோட், மானிப்பாய். 3291

## தேவை

இணுவிலில் அமைந்திருக்கும் நவீன வசதிகள்கொண்ட ''காமென்ட்ஸ்'' தொழிற்சாலைக்கு பல அனுபவமுள்ள பெண்கள் தேவை. முன்னர் காமென்ட்ஸ் தொழிற்சாலைகளில் வேலை செய்தவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும். சாந்தா காமென்ட்ஸ் இராஸ்ஹொட், கே கே. எஸ். வீதி. மருதனுமடம் சந்தி அருகில், இணுவில். 8290

பச்சிலைப்பள்ளிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை.

**24 ஸ்ரீ 8379**

**மொறிஸ் லொறி**

## விற்பனை

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 24 ஸ்ரீ 8379 இலக்க மொறிஸ் லொறி கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. கேள்வி விண்ணப்பப் படிவத்தை 25/– ரூபா பங்கு பற்றுவதற்கான அனுமதிக் கட்டணமாகவும் 2000/– ரூபாவை மீளளிக்கப்படும் வைப்புப் பணமாகவும் செலுத்தி சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். அனுமதிக்கட்டணம் ரூபா 25/– மீளளிக்கப் படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால் மூலம் தலைவர், பச்சிலைப் பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''லொறி கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 5–6–82. லொறியை 27–5–82 தொடக்கம் 29–5–82 வரை சங்கத்தில் பார்வையிடலாம்.

வெற்றிபெற்ற விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்டதும் 25 % சட்டணத்தை ரொக்கமாக உடன் செலுத்துதல் வேண்டும். மிகுதி 75% கட்டணத்தையும் ஏழு நாட்களுக்குள் செலுத்தி லொறியை எடுத்தல் வேண்டும். கேள்வி விண்ணப்பம் தொடர்பாக நெறியாளர் குழுவின் தீர்ப்பே முடிவானதாகும். மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

பொது முகாமையாளர்
பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. சங்கம்,
பளை.

22–5–1982. 3265

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு கனகநாயகத்தின் மரணசாதன சொத்துக்கள் பற்றிய விடயம்.

–காலமானவர்

வழ. இல. தத்துவம்/132
முருகையா பாலசுப்பிரமணியம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

–மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆண் எவரும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 09ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

வரைவு
வி. எஸ். கணேசலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

1982ம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

32[illegible]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கந்தர்மட வீதி 184ம் இலக்கத்தில் வசித்த காலஞ்சென்ற பொ. காசிலிங்கத்தின் மனைவி விசாலாட்சியின் மரணச் சொத்துக்கு நிர்வாகத்தத்துவம் பெறுவதற்கு மனுப்பண்ணும் விடயமாக.

(மரணமெய்தியவர்)
மரணச்சொத்து) இல.
நியாயாதிக்கம்) தத்துவம்/3660
பொன்னம்பலம் காசிலிங்கம் இல. 184, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனமில்லாத் தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982ம் ஆண்டு வைகாசிமாதம் 28ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற ஆணைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 10ம் திகதி.
தயாரித்தவர்:
C. சோமசேகரம்,
மனுதாரின்
சட்டத்தரணி. 3251

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

தெங்குபனம் பொருள் கூட்டுறவு முறை:

# 'சமூகப்புரட்சி நோக்கிலேயே

## டாக்டர் என். எம். ஏற்படுத்தினர்'

(அரியாலை)

''சமூகப் புரட்சியை ஏற்படுத்து முகமாகவே காலஞ்சென்ற கலாநிதி என். எம். பெரேரா தெங்கு பனம் பொருள் கூட்டுறவு முறையை ஏற்படுத்தினரே தவிர வெறும் வாய்ப்புக்காகவல்ல தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கத்தை ஆதரிக்க வேண்டுமா அல்லது அதனை அழித்து விடவேண்டுமா என்பது தொழிலாளர்களுக்கு இன்று ஏற்படவுள்ள புதிய சவாலாக இருக்கிறது.''

இவ்வாறு உடுப்பிட்டிப் பாராளுமன்றஉறுப்பினர் திரு. த. இராசலிங்கம் வலி, கிழக்கு தென்பகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் கூட்டுறவுச் சங்கத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. சீ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. த. இராசலிங்கம் எம். பி. தொடர்ந்து பேசுகையில், ''கடந்த பத்து ஆண்டுகாலமாக தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் பல சிக்கல்களைத் தாண்டி வளர்ச்சி பெற்றுள்ளது. இது நான்கு திணைக்களப் பிரிவுகளின் அமைப்பின் கீழ் இருப்பதால் இது நான்கு கோணங்களுக்கும் இழுபட வேண்டிய சூழ்நிலையில் இன்று இருக்கிறது. கூட்டுறவு ஆணையாளரின் உதவியின் காரணமாகவும் அமரர் நல்லையாவின் உதவியின் பேரிலும். பணம் பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. கே நடராசா ஆகியோரின் தீவிர உழைப்பினுல் 1979ம் ஆண்டுக்குப் பின்னர் இச் சங்கத்தில் பெரிய திருப்பத்தைக் காணமுடிகிறது'' என்றுகுறிப்பிட்டார்.

கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் இச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் சீவல் தொழிலாளர்களின் பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் அவற்றை தீர்த்து வைப்பதுடன் அவர்களின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காவும், பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்காவும் தம்மாலான உதவிகளை செய்ய எந்தநேரமும் ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. என். இராசேந்திரன் பேசுகையில் சீவல் தொழிலாளரிடையே கூட்டுறவை ஏற்படுத்திய மறைந்த தலைவர் கலாநிதி என். எம். பெரேரா என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர் என்றார்.

உரும்பராய் பங்குத்தந்தை வண. பிதா ஜி. கா. நேசநாயகம், சங்கத்தின் முன்னாள் தலைவரும் கோப்பாய் தெற்கு கிராமோதய சபைத்தலைவருமான திரு. கே, கனகலிங்கம். யாழ், மாவட்ட அபிவிருத்தி சபையின் உறுப்பினரும், சங்கத்தின் சமாசத்தலைவருமாகிய திரு. எஸ். நடேசு, யாழ். மாவட்டபனம் பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. கே. நடராசா, கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். வேலாயுத பிள்ளை ஆகியோரும் பேசினர்.

சங்கத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை கூட்டுறவு ஆணையாளரின் பாரியார் திருமதி எஸ். வேலாயுத பிள்ளை வழங்கினர். (அ)

யாழ். பல்கலைக்கழக பட்டதாரிகள் ஒன்றியம்
25-05-82 யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நடைபெற இருந்த
குருக்ஷேத்திரோபதேசம்
சிலையின் சீற்றம் நாடகங்கள்
23-06-82, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நடைபெறும்.
செயலாளர் (32[illegible]3)

**CHARTERED**

PRELIMINARY LICENTIATE

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்; 2-6-82 (புதன்)
இடம்: உடுப்பிட்டி அல்லது நெல்லியடி
மனுக்கள் முடிவு திகதி; 27-5-82
விபரங்கட்கு:

கு. செல்வத்தம்பி,
'செல்வகிரி', உடுப்பிட்டி
3280

'யமஹா' மோட்டார் சைக்கிள்

**இலவச திருத்துதல் சேவை**

'யமஹா' கொம்பனி வல்லுனர்கள்
மேற்பார்வையில்
28-5-82-ம், 29 5-82 ம் இரு தினங்கள்
மாத்திரம்
உதிரிப்பாகங்கள் விசேட கழிவு விலையில்
விற்கப்படும்
இச்சேவையைப் பெறவிரும்பின் உடனே
வந்து நேரத்தைப் பதிவுசெய்யவும்
வடமாகாண ஏகவிநியோஸ்கதர்கள்
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட்
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




## விளையாட்டு விழா

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை முல்லைத்தீவு விளையாட்டரங்கில் நடைபெறும். (கு)

## தடை விதிப்பு

[மன்னர்]

மன்னர் வட்டக்கண்டல் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 'வீடியோ' மூலம் படம் காட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் 'வீடியோ' மூலம் பாலியலைத் தூண்டும் படங்கள் காண்பிக்கப்படுவதாக கிராமவாசிகள் வட்டக் கண்டல் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு முறையிட்டதைத் தொடர்ந்து வட்டக்கண்டல் கிராம அபிவிருத்திச் சங்கம் மன்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு இப்பகுதியில் வீடியோ மூலம் படம் காட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

## கூட்டுறவுக்கு விசுவாசமான உழைப்பு அவசியம்

(துணுக்காய்)

''கூட்டுறவு இயக்கம் மேலும் வளர பணியாளர்கள் இயக்குநர்கள், அங்கத்தவர் அனைவரும் விசுவாசமாக உழைப்பதன் மூலமே இந்த இயக்கம் வளர்ந்து செலும். இதில் அனைவரும் நம்பிக்கை கொண்டிருத்தல் அவசியமாகும்'' என்று கர்ச்சி வடக்கு ப. நோ. கூ ச. பொதுமுகாமையாளர் திரு. க. துரைச்சாமி ப. நோ. கூ. சங்கத்தின் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க வருடாந்த மகாநாடு சங்கமண்டபத்தில் நடைபெற்றபோது குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூட்டுறவு ஊழியர்கள் கூட்டுறவு ஸ்தாபனத்தின் முதலாளியாகவும் தொழிலாளியாகவும் உள்ளனர் என்றும் அவர்கள் தாபனத்துக்கு உழைத்துக் கொடுப்பதன் மூலம் தான் தமக்கு உரிய நலனை பெறமுடியும் என்றும் கூறினர்.

‘‘கடும் வரட்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க

# மன்னாரில் தண்ணீரைத் தேக்கிவைக்க நடவடிக்கை வேண்டும்!’

## அமைச்சர் காமினிக்கு கோரிக்கை

[மன்னார்[

மன்னார் மாவட்டத்தின் ஜீவநாடியான கட்டுக்கரைக் குளத்தின் கட்டில்வைத்து காணி, காணீ அபிவிருத்தி அமைச்சரை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இக்கட்டுக்கரை குளத்திட்டம் 250 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு 100ஆண்டுகளுக்கு முன் பூர்த்தி செய்யப்பட்டது. கட்டுக்கரை குளம் சரித்திர பிரசித்தி பெற்றது. ஆரம்பத்தில் இக்குளமே இலங்கையில் மிகவும்பெரிய குளமாக விளங்கியது.

இவ்வாறு முருங்கனில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவுக்கு மன்னார் மாவட்ட விவசாயிகள் சங்கத்தால் அளிக்கப்பட்ட பொதுவரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் எம்.பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

‘‘அமைச்சர் மன்னாருக்கு 2 நாட்கள் வருவதாக சொல்லியிருந்தார், அவருக்குநிறைய வேலைகள் இருந்ததால் அவருடைய மன்னார் விஜயம் ஒரு நாளாகக் குறைக்கப்பட்டது. அமைச்சர் திறமைசாலி, சிறந்த கல்வியறிவுடையவர். பாராளுமன்றத்தில் இளையவர். அவர் மன்னார் மாவட்டத்தின் நீர்ப்பாசனப் பிரச்னைகளைத் தீர்க்க உதவிகள் புரிவார்.

மன்னார் மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாகும். மன்னார் மாவட்ட மக்களுக்கு விவசாயம் பரம்பரைத் தொழில் விவசாயத்தைத் தவிர வேறு தொழில் அவர்களுக்குத் தெரியாது. கடந்த 4 வருடங்களாக மன்னார் மாவட்டம் வரட்சியினால் பாதிப்படைந்து வருகிறது கடந்த வருடம் 60 வீதமான விவசாயம் வரட்சியினால் பாதிப்படைந்தது

### மழைநீரை தேக்கி வைத்து

‘அமைச்சர் 2 மாதங்களுக்கு முன்னர் வெள்ளாங்குளம் விசாயப் பண்ணைக்கு வந்திருந்தார். அப்போது நிலத்தின் கீழ்உள்ள நீரினைவெளியே கொண்டு வருவது பற்றி ஆராய வந்திருந்தார். இப்போது நிலத்திற்கு மேலே உள்ள நீரையும் மழை நீரையும் தேக்கி வைத்து பயன் பெறக்கூடிய வழிவகைகளைச் செய்வதற்காக வந்துள்ளார். கோவில் குளம், புதுக்குளம், இலுப்பைகடவை, ஆத்தி மோட்டை ஆகியபகுதிகளில் உயிர்நாடியான கூராய் குளத்தினையும் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். நாம் சொல்லாமலே கூராய் குளத்தின் நிலையை அமைச்சர் அறிந்து கொண்டார். கூராய்குளம் பற்றி அமைச்சர் கேட்ட கேள்விகளுக்கு மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. வி. கைலாசபிள்ளை தகுந்த பதில்களை வழங்கினர். மன்னார் மாவட்டத்தில் மூன்று திசைகளிலிருந்து மூன்று குளங்கள் மன்னார் மாவட்ட விவசாயத்திற்குப் பேருதவி வழங்குகிறது. வடக்கே கூராங்குளம், தெற்கே அகத்திக்குளம் மத்தியில் கட்டுக்கரைக்குளம், கட்டுக்கரைக் குளத்தைப் போல் ஒரு குளத்தை இனிமேல் அமைக்க முடியாது. கட்டுக்கரைக்குளம் உட்பட சகல குளங்களையும் புனரமைக்க 4 ஆயிரம்லட்சம்ரூபா தேவை’ என்றார்.

### அபிவிருத்தி சபைத் தலைவர்

மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. பி. எம். செபமாலை தமதுரையில் கூறியதாவது:

‘‘நீர் நிலம் இரண்டிற்கும் பொறுப்பான அமைச்சரை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம். அமைச்சர் விவசாயிகளின் குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில்முழுமையான நீர்ப்பாசனத் திட்டமில்லாததால் விவசாயிகள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். நெல்லை விதைக்கும்போது இந்த நெல் விளையுமா என்ற சந்தேகம்விவசாயிகள் மனதில் ஏற்கனவே ஏற்பட்டு விடுகிறது

மன்னார் மாவட்டத்தில் சிறந்த மண்வளம் உண்டு. கூடிய விரைவில் இப்பகுதியில் ஒரு முழுமையான நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தி மக்களுக்கு வசதியளிக்கவேண்டும் மன்னார் மாவட்டத்தில் தண்ணீருக்குத்தான் பெருங்கஷ்டம். தண்ணீரை எப்படி தேக்கிவைத்து பலனைப்பெறுவது என்பதற்கு ஒரு வழியை கண்டுபிடிக்கவேண்டும். கட்டுக்கரை குளம் புனரமைக்கப்படவேண்டும். மன்னார்மாவட்டத்தில் குழாய்க்கிணறுகள் மூலம் நீரினைப் பெறவசதி செய்ய வேண்டும்.

### விவசாயத்தில் ஆற்றல் உள்ளவர்கள்

‘‘மன்னார் மாவட்ட மக்கள் விவசாயத்தில் சிறந்த ஆற்றல் உடையவர்கள். இலங்கையில் கூடுதல் விளைச்சலைப் பெற்றது. மன்னார் மாவட்டம் கடந்த சில வருடங்களாக வரட்சியால் விவசாயம் பாதிப்படைந்துள்ளது. எமது மாவட்டத்திற்குப் போதிய நீர் கிடைத்தால் தொடர்ந்தும் இலங்கையிலேயே கூடுதலான விளைச்சலை மன்னார் மாவட்டம் பெறும்’’ என்றார்.

நீர்ப்பாசன திணைக்கள அதிபர் திரு. பொன்ராசா தமது உரையில், மன்னார் மாவட்ட விவசாயிகள் சங்கத்தால் அமைச்சருக்கு வழங்கப்பட்ட மகஜர் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட மக்களுக்காக என்னால் முடிந்தளவு நீர்ப்பானத் திட்டங்களை பூர்த்தி செய்து குறைகளைத் தீர்ப்பேன் என்றார்.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வ. ம தேவன் தமது உரையில், அமைச்சர் மன்னார் மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனப் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்க்கமான முடிவுகளை வழங்குவார் என்றார்.

## கொலைவழக்கில் சாட்சி கடுமையான எச்சரிக்கை

(மட்டுவில்)

‘இது நீதிமன்றம். நீர் ஒரு சாட்சி. அதுவும் ஒரு கொலை வழக்கில் சாட்சியமளிக்கிறீர் என்பதை மறந்துவிடாதீர். கேட்கப்படும் கேள்வியை உணர்ந்து உண்மையை நினைவுபடுத்திப் பதில் கூறும். இங்கு சிரிக்கக்கூடாது. இப்படிச் செய்வீரானால் உம்மை விளக்கமறியலுக்கு அனுப்பவேண்டிய நிலை ஏற்படும்.’

இவ்வாறு எழுதுமட்டுவாள் கொலைவழக்கில், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சாட்சியைப் பார்த்து எச்சரிக்கை செய்தார்.

இந்த வழக்கில் 1981ம் ஆண்டு ஜுலை மாதம் 20–ம் திகதி எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சிதம்பரநாதன் என்பவரை, கந்தன் சின்னத்தம்பி இராசையா, சி. சுந்தரலிங்கம் ஆகியோர் கத்தியால் வெட்டிக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எச். எம். காரியப்பர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த வீ. கிருஷ்ணகோபால் சாட்சியமளித்தார். சாட்சி மேலும் கூறியதாவது:-

‘சம்பவதினம் நான் எழுதுமட்டுவாளில் வந்து பஸ்ஸால் வந்து இறங்கி நாகர்கோவில் வீதியால் வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். கணபதிட்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரைச்சந்தித்தேன். அப்பொழுது அவர், ‘பொடியன்கள் இரு பகுதியும் அடிபட்டுக்கொண்டார்கள். சமாதானம் பேச நாளை வா’ என்று கூறினார். உடனே நான் இராசையா வீட்டிற்குச் செல்லத்திரும்பினேன். அப்பொழுது சிதம்பரநாதனும் என்னுடன் வந்தார். நாம் இருவரும் இராசையா வீட்டிற்குச் சென்றோம். சமாதானம் பேச அழைத்தேன். ஆம். என்றார். நாங்கள் திரும்பும் பொழுது இராசையா சிதம்பரநாதனுக்கு வெட்டினார். உடனே சிதம்பரநாதன் திசை தெரியாமல் எதிரியின் வளவுக்குள்ளேயே ஓடினார். நானும் வெளியே ஓடினேன். எனக்குப் பின்பக்கத்தில் ஒருவெட்டு விழுந்தது. அது யாரால் வெட்டப்பட்டது என்பது தெரியாது. நான் ஓடும்போது இராசையா சிதம்பரநாதனுக்கு வெட்டிவிட்டார் என்று கத்தியபடி ஓடினேன்.

‘சிதம்பரநாதனுக்கு விழுந்த வெட்டுடன் சிதம்பரநாதன் இறந்தார். மரண விசாரணையின்போதும் நான் கலந்துகொண்டேன். ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்திய நீதிபதிக்கும் வாக்குமூலம் அளித்தேன்.

தொடர்ந்து சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அப்பொழுது சாட்சி பல முறை பல தவறுகளாகப் பதிலத்தார், நீதிபதி பல முறை சாட்சியை எச்சரித்தார். மேல் விசாரணை அடுத்த மாதம் 22-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

## உற்சவம்

[மட்டுவில்]

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 28–ந் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.

° ° °

மட்டுவில் விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 28-ந் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## வாகனம் பழுதானதால் திடீர்ப்பரிசோதனை இல்லை!

(கரவெட்டி)

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. க.சிவநாதன் தலைமையிலான கல்வி அதிகாரிகளைக் கொண்ட குழு பாடசாலைகள் தோறும் மேற்கொள்ளும் திடீர் பரிசோதனை வேலைகள் கடந்த வாரம் நடைபெறவில்லை.

யாழ். கல்வித் திணைக்களத்தின் வாசனம் திடீரெனப் பழுதடைந்ததே இதற்குக் காரணமாகும். இவ்வாரம் முதல் தொடர்ந்தும் இத்திடீர் பரிசோதனைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நாய்க்கு நஷ்டஈடாக ரூ. 1,500 செலுத்தினர்

(துணுக்காய்

வீட்டில் வளர்த்து வந்த உயர்சாதி நாய்ஒன்று நஞ்சுண்டு மரணமானதால் அந்நாய்க்கு குற்றப்பணமாக ஒருவர் 1500 ரூபாவை கட்டினார்.

இச்சம்பவம்பற்றி கூறப்படுவதாவது:—

உரும்பிராய் மேற்கில் ஒரு வீட்டில் உயர்சாதிநாய் ஒன்று வளர்ந்துவந்தது. சம்பவதினம் வீட்டுக்காரர்நாயை அவிழ்த்து விட்டபொழுது அந்நாய் அருகிலுள்ள தோட்டத்திற்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த நஞ்சு உணவை உட்கொண்டு அவ்விடத்திலேயே மரணமானதாம்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிசார் விசாரணை நடாத்தி அந்த தோட்டக்காரரை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்தனர்.

நாய் இறந்துகிடந்த தோட்டக்காணிக்காரர் மீதும் பொலிசார் சந்தேகம்கொண்டு அவரைத் தீவிர விசாரணைக்குட்படுத்தியதைத் தொடர்ந்து நாய் உரிமையாளருக்கு நஷ்டஈடாக ரூபா 1500 செலுத்தினார். (கு)

## டுவிஸ்ட் நடனம்: ஒருவார சாதனை முயற்சி

(கோண்டாவில்)

ஏழு நாட்கள் தொடர்ச்சியாக டுவிஸ்ட் நடனமாடி சாதனை நிலைநாட்டுவதில் இளைஞர் ஒருவர் ஈடுபட்டுள்ளார்.

கோண்டாவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த சின்னத்துரை குலேந்திரன் எனும் இளைஞர் நேற்று முன்தினம் பகல் மூன்று மணிக்கு தனது சாதனை முயற்சியை ஆரம்பித்தார்.

திரு. நா. மாரிமுத்து குத்துவிளக்கேற்ற, மேற்படிசாதனை முயற்சியை திரு. ந. சுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்தார். இளைஞர் குலேந்திரன் எதிர்வரும் சனிக்கிழமைவரை தொடர்ச்சியாக டுவிஸ்ட் நடனமாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

## இன்று பூங்காவனம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சிவன்கோவில் பூங்காவன உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். முக்கிய நிகழ்ச்சியாக இந்திய தவில், நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரிகள் இடம் பெறும்.

## மூலாதாரப் பாடசாலை அதிபர் நியமனம்

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்தில் பரீட்சார்த்தமானமுறையில்இயங்கி வரும் புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலையின் மூலாதாரப் பாடசாலை அதிபராக யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கே.இராசநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் முதல் இயங்கி வரும் இக்கொத்தணிப் பாடசாலையின் மூலாதாரப் பாடசாலை அதிபராக இதுவரை காலமும்புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கே. குகதாஸன் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார். திரு. இராசநாயகம் புதிய அதிபராக நியமிக்கப்பட்டபோதிலும் புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரியாக திரு. குகதாஸனே தொடர்ந்தும் கடமையாற்றுவார்.

## பனம்பொருள் சங்க ஆண்டுவிழா

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவும் சங்கத்தின் 10–வது ஆண்டு நிறைவு விழாவும் அடுத்த மாதம் 6–ந் திகதி நடைபெறவுள்ளது. 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, 10 மைல் பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி. மரதன் ஓட்டப் போட்டி, கரபந்தாட்டப் போட்டி, பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டி ஆகிய பல போட்டிகள் நடைபெறவுள்ளன. வட்டுக்கோட்டைத் தொகுதியில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மாத்திரமே இப்போட்டியில் பங்கு பற்ற முடியும்.

## கூட்டுறவு தினவிழா

[வேலணை]

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஜுலை மாதம் கூட்டுறவுதினவிழாவை வெகு சிறப்பான முறையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது.

கூட்டுறவு தினவிழாவையொட்டி பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும் பொதுமன்றங்களுக்கிடையிலும் கூட்டுறவு சம்பந்தமான பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டிகளையும் நடத்தும் என்று சங்கத் தலைவர் திரு. நா. பாச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### மணிவாக்கு

மனச்சான்று கடவுளின் ஆணை; அது ஒரு பென்சில் போன்றது; அதனைக் கூராக வைத்திருந்தாலே அதன் உபயோகம் தங்கியிருக்கிறது.

— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## மாணவர் கொந்தளிப்பு

யாழ். பல்கலைக் கழக மாணவர் அவைப் பிரதிநிதிகள் இன்று தொடக்கம் 26-ம் திகதி புதன்கிழமை வரை விமலராஜா விடயம் குறித்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாகச் செய்தி!

இவர்கள் நடத்திவரும் பகிஷ்காரத்துக்கு மட்டக் களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

கொழும்புப்பல்கலைக்கழக மாணவர்களும் தம் அனுதாபத்தை செயலில் காட்டினர்.

பேராதனையில் பல பட்டதாரி மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்ததோடு, மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனராம். தங்கள் ஐந்து சகாக்களை படிப்பு இடை நிறுத்தம் செய்ததால் எழுந்த பிரச்னை இது.

பேராதனைப் பிரச்னை சிறப்பாகவும், பல்கலைக் கழகங்களில் தோன்றும் குழப்பநிலைபொதுவாகவும், புதிய இடதுசாரிக் கட்சிகளின் தலையீட்டாலேயேஏற்படுகின்றதென்பது புலனாய்வுக் குழுவின் கண்டுபிடிப்பாம்.

யாழ்ப்பாணப் பிரச்னை இவ்வித குற்றச்சாட்டுக்குள்ளாகவில்லை. மாணவர்களை அரசியலிலிருந்து பிரித்துப்பார்க்க முயல்பவர் கண்ணில்லாதவர்களே! ஆனால் அரசியல்கட்சி எதையும் ஆதரித்தபோதும் அதன் தலையீட்டுக்கும், ஆதிக்கத்துக்கும் இடமளிப்பது மாணவ சமுதாயத்தின் இலட்சியத்துக்கு மாறானது.

இன்றைய மாணவருலகம் அரசியல் விடயங்களில் மிகச் சிரத்தையும், கவனமும் செலுத்துகின்றது. அது நல்லது; ஆனால் தீவிர சிரத்தையால் ஒருகட்சியின் கொள்கையை மட்டும் பின்பற்றுவதென்பது இதமான செயல்அன்று; விவேகமானதுமல்ல; கட்சி வாதம் பிரிவினையை ஏற்படுத்தி மாணவர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதில் பிணக்கு ஏற்படுத்தும்.

யாழ்ப்பாண மாணவர்களின் கோரிக்கை நியாயமானதென்பது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு தென்னிலங்கை மாணவரும் ஒத்துழைக்க அவர்களின் அனுதாபம் கிடைத்திருக்கிறது. காரணம்: ஒரு மாணவனின் அடிப்படை உரிமை பறிக்கப்பட்டிருக்கிறதே!

அம் மாணவன் தமிழன்; அது வடக்கிலுள்ள பயங்கர வாதத்தோடு சம்பந்தப்பட்டது; அது தமிழ் உரிமைகள் போராட்டத்தின் அம்சம்; என்ற தவறான பிரசாரத்துக்கு இடமளித்தால் கோரிக்கை பலவீனப்பட்டுவிடும்; கட்சி வேறுபாடுகள் தலையெடுத்தால் பிசுபிசுத்துப் போகவும் கூடும். இந்த விடயத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் விழிப்பாக இருப்பதை நாம்காண முடிகிறது.

மாணவருலகம் முழுதுமே நாம் சொல்வதை ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், எமது கருத்தைக் கூறுமலிருக்க முடியாது. பலவகையான புத்தகங்களைப் படிப்பதுபோல, சகலகட்சிகளின் வாதங்களையும் மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்; ஆனால் அவற்றில் அமைந்துள்ள உண்மையை மட்டுமேசெரித்துக் கொண்டு அல்லாததைத் தள்ளிவிட வேண்டும். இந்த மனப்பாங்கோடு அரசியலைக் கவனிப்பதுதான் மாணவர்களுக்கு பொருத்தமானது.

தங்களை நேரடியாகப் பாதிக்கும் விடயத்தில் ஒற்றுமையைக்கொண்டு, பகிஷ்கரிக்கவோ உண்ணாவிரதமிருக்கவோ கூடாதென்று நாம் சொல்லவில்லை. மாணவர்களே பலசீர்திருத்தப் போராட்டங்களில் சமூகத் தொண்டில் முன்னின்று உழைப்பவர்கள்; ஆனால் நேரடியில் அரசியலில் கலந்துகொண்டு ஆதிக்கம் பெறுவதென்பது அவர்களின் அவசிய பொறுப்பல்ல.

பயங்கரவாதத்தில் ஒரு புதியதிருப்பத்தைஅடைந்துவிட்டதாகப் பறைசாற்றப்படும் இவ்வேளையில், பல்கலைக்கழக மாணவர்கள் அரசின், அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்கு இடமளிக்கும்படி நடந்துகொள்ளக்கூடாது.

நாட்டின் சமூகங்களைப் பிரித்து ஆளும் தந்திரமே சிறந்ததென்று கருதுவது ஆட்சியாளரின் இயல்பான தந்திரம். மாணவ உலகத்தை – தெற்கு வடக்கு என்று பிரிக்க முயல்வது இயல்பு. ஒன்றுபட்ட மாணவ உலகம், தங்கள் உரிமைகளை வென்றெடுப்பது மட்டுமல்ல, தங்கள் சமுதாயத்தின், தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்கமுடியும்.

எவ்வாறு தமிழ்ச் சமுதாயத்தின் உரிமை இயக்கம் அவர்களின் விவேகமான உணர்ச்சியில் பெரிதும் தங்கியிருக்கின்றதோ, அவ்வாறு நாடு அனைத்திலும் ஏற்பட வேண்டிய அரசியல், சமூக சீர்திருத்தங்கள் ஒன்றுபட்ட மாணவ சமூகத்தினால் ஆக வேண்டியவை.

நெடுங்காலமாக உடலோடு உடலாக ஒட்டியிருக்கும் சமூகக் கேடுகளை ஒரேயடியில் போக்கிவிட முடியாது. அதற்குப் பொறுமையும் விடாமுயற்சியும் வேண்டும்

காலத்தினால் ஏற்படுகிற மாறுதல்களை எமது ‘பெரியார்கள்’ கிரகிப்பதில் பின்னிற்பது இயல்பு. நியாயம் எது, அநியாயம் எது என்று பகுத்தறியும் நுண்மதி, அவர்களிடம் உறங்கியிருந்தாலும், இளைஞர்களிடம் உயிர்த்துடிப்புடன் காணப்படுகிறது.

இந்தப் புரட்சி உணர்வை ஆக்கபூர்வமான திசையில் திருப்பவேண்டியதே அவர்களின் தலையாய கடன்.

புரட்சியென்பது ஒரு பரிகாசச் சொல்லாய்விட்டது. நாம் குறிப்பிடுவது; எளிய வாழ்க்கைக்கு ஏற்றம் உண்டாக்கும் புரட்சி, பிறமொழியில் பேசுவது பிற்போக்கு என்று உணரும் புரட்சி; பழையனவெல்லாம் கழிவல்ல; புதியனவெல்லாம் சிறந்தனவல்ல என்ற புரட்சி; அதிகாரி என்றால் மக்கள் தொண்டன்; குடிகளின் வழியே அரசின் வழி என்ற புரட்சி; இவற்றைத் தக்க வழியில் செயற்படுத்தும் ஆற்றல் அதிகரிக்குமாயின் மாணவர் கொந்தளிப்பு நன்மையில் முடியும்.

பாலர் பாடசாலை

# ஆசிரியருக்கு வேண்டிய இலட்சணங்கள் யாவை?

(நேற்றைய தொடர்ச்சி)

ஆசிரியர் திறமையுள்ளவர் மட்டுமல்லாமல் இயற்கையின் அதிசயங்களை அவதானிக்கக் கூடிய விருப்புடையவராகவும் இருக்கவேண்டும். அவரது தாக்கம் நேரடியாக அமையாது, உணரக்கூடியதாக அமைய வேண்டும். அவதானிக்கின்ற இயற்கை வினோதத்தை மதிப்பவராக அவர் இருக்கவேண்டும். எந்த இடத்திலும் ஆசிரியன் தனது ஆளுமையை மாணவரது ஊக்கப்பாட்டிற்கு முன்னே வைப்பாரானால் நாம் ஆன்மாவையே கொன்ற குற்றத்திற்கு ஆளாவோம் ஆசிரியர் அமைதியான பிள்ளையின் ஆத்மாவின் வளர்ச்சிக்கு வழிகோலும் ஒரு பார்வையாளராகப் பொறுமைசாலியாக விளங்க வேண்டியது அவசியம். மாணவனது ஊக்கப்பாட்டிற்கு மதிப்பளிக்காமல் தானே எல்லாவற்றையும் ஊட்ட விளைவது பொருத்தமானது அல்ல. ஆசிரியர் ஒரு அவதானியாகவும் வழிகாட்டியுமாகவே அமைய வேண்டும். தனது நடவடிக்கையால் அதிகாரத்தால் ஏற்பட்ட தடையைத் தனது தலையிடாப் போக்கினால் நீக்கலாம். ஆசிரியர் தனது செயலை அவதானித்தலோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாது சில செய்முறைப் பரீட்சைகளிலும் ஈடுபடவேண்டும். இவ்வகையில் ஒன்றிணைந்த பாடங்களே பரீட்சார்த்த ரீதியில் அமையும். பாடங்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் ஏற்றதாக அமைவதுடன் மிகவும் சுருக்கமாகவும் இருக்கவேண்டும். அதன் இன்னொரு பண்பு அதன் எளிமையாகும். மூன்றாவது தன்மை பாடம் நோக்குடையதாக இருக்க வேண்டும். பாடங்கள் நடாத்தப்படும் விதத்தில் ஆசிரியரின் ஆளுமை மறைய வேண்டும். பிள்ளையின் கவனத்தை ஈர்க்கவேண்டிய பொருளே அங்கு முதன்மை பெறவேண்டும். ஆசிரியர் பாடத்தின் பொருளில் மாணவன் ஆர்வம் செல்கின்றதா என்பதையும், எப்படி அவன் ஆர்வப்படுகிறான் என்பதையும் எவ்வளவு நேரம் ஆர்வம் நீடிக்கின்றது என்பன போன்றவற்றையும் அவதானிப்பதோடுபிள்ளையின் முகபாவ மாற்றங்களையும் கவனிக்கவேண்டும். பிள்ளையின் உரிமையான சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பதில் ஆசிரியர் கவனமாக இருக்கவேண்டும், பிள்ளையின் ஆர்வம் காரணமாக அவன் முழு ஆளுமையும் ஊக்கப்படுத்தலே பிரதான விடயமாக இருத்தல் வேண்டும்.

### வழிகாட்டி

ஆசிரியர் தொழிற்பாடு தீர்க்கமான நோக்குடையதாக அமையவேண்டும். அவரின் மனதில்பிள்ளைவளர நான்என்பது தேயவேண்டும். ஆசிரியர் தன்னை அதிகம் வெளிக்காட்டாத ஒரு வழிகாட்டியாகவும் தேவை ஏற்படும்போது மட்டும் உதவிசெய்பவராகவும் விளங்குவதுடன், பிள்ளைகளுக்கும் அதற்கு ஏற்படும் அனுபவத்திற்குமிடையில் நிற்கும் தடையாகநில்லாமலும்தன்னை வைத்துக்கொள்ளவேண்டும். உற்சாகமூட்டி அந்தஉற்சாகம் வளரத் தடையாக இல்லாமல் இருப்பதே ஆசிரியரின் சிறந்த வேலை.

இவ்விதம் ஒரு ஆசிரியன் தனது ஒவ்வொரு மாணவனது ஆன்மாவையும் தொட்டு எழுப்பி, அவனது ஆன்மாவை விழிப்படையச்செய்து செயற்படவைத்தால், கண்ணில் படாத ஒரு தேவதைபோல அவர் அந்த மாணவர் அனைவரையும் தன் வசப்படுத்திவிடுகிறார். அதன்பின் ஒவ்வொரு மாணவனும் ஆசிரியர் தம்முன் ஜீவனுடன் துடிப்புடன் வாழ்வதை உணர்ந்து அவரது ஒரு சைகையால் அல்லது ஒரு சொல்லால், புன்சிரிப்பால் ஆசிரியை மதித்து அடையாளம் கண்டு அவர் சொல்லைக் கேட்பார்கள்.

### கற்பிப்பதும் அவதானிப்பதும்

ஒரு ஆசிரியர் கற்பிப்பது சொற்பம். அவதானிப்பது அதிகம். இக்காரணத்தினால் தான் ஆசிரியன் என்ற பெயரை இயக்குநராக மாற்றியுள்ளனர். இயக்குநர் தனது வேலையிலுள்ள இருகாரணிகளை உணரவேண்டும். அவை பிள்ளையை வழிகாட்டல் என்ற ஒன்றையும் ஒவ்வொருமாணவனது தொழிற்பாடுகள்என்ற மற்றதுமாகும். பிள்ளையின் உணர்ச்சிகளை கருத்தாக்குவதற்ப் தலையிடவேண்டுகும். நிச்சயபற்றவையை நிதர்சனமாகத் தலையிடவேண்டும். அத்துடன் கருத்துக்களை ஒன்றுசேர்க்கவும் தலையிடவேண்டும். ஆசிரியர் ஒருபாடம் நடாத்தும் போது மாணவர்களது உணர்வுகளை பாடத்தின் நோக்கத்தோடு மட்டப்படுத்த வேண்டும்.

ஆசியரிர் சிலஅபிப்பிராயங்களைச்செய்து காட்டுவதன்மூலம் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு தொடையின் ஒவ்வொரு பகுதிகளும் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்றுமுதலில் காட்டுவார். ஆனால்பெரும்பாலும் பிள்ளைகள் ஆசிரியர் அவதானிப்பதன்மூலம் கற்றுக்கொள்ளாமல் தனது தோழனைப் பார்த்தே அறிந்துகொள்கிறது. அப்பியாசங்களை மீண்டும் மீண்டும் செய்வதன்மூலம் தனது அவதானசக்தியைக் கூர்மைப்படுத்தி பிள்ளை தன்னையேதான் திருத்திக்கொள்கிறது.

இரு விடங்கள்பற்றி ஆசிரியர் எச்சரிக்கைசெய்யவேண்டும். முதலாவது பாடத்தை மீண்டும் நடாத்தி பிள்ளையை நிர்ப்பந்திக்கக்கூடாது. இரண்டாவது பிள்ளை பிழை விட்டுவிட்டது என்ற உணர்வை ஏர்படுத்தக்கூடாது. அல்லது அதற்கு விளங்கவில்லை என்ற உணர்வதை ஏற்படுத்தக்கூடாது

உணர்வு முறைப் பயிற்சிகள் (Sense Education). பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையுமென்றும், இவற்றுடன் மொழியையும் இணைத்துக்கொள்வதே சிறந்தது. இத்தொடரில் சேகுயின் பிரகாரம் (Sequin) மூன்று படிகள் (Pericds) சாதாரண பிள்ளைகளுக்கு உகந்ததெனக் கண்டறிந்துள்ளனர்.

**உ. ந. தேவகடாட்சம்**
**(வட்டு லயன்ஸ் கழகம்)**

### முதற் படி

உணர்வு முறைக்கல்வியுடன் பெயர்களை இணைத்தல், உதாரணமாக பிள்ளைக்கு நாம் சிவப்பு நீலம் ஆகிய இரு வர்ணங்களைக் காட்டுவோம். சிவப்பைக்காட்டி நாங்கள் சொல்லுவோம். இது சிவப்பு அதேபோல் நீலத்தைக்காட்டி இது நீலம் என்போம். பிறகு நாம், வர்ணச்சுருள்களை மேசையில் மாணவர் பார்வையில் வைப்போம்.

### இரண்டாம் படி

பெயருக்கேற்ற பொருள்களை அடையாளம் காணல் நாங்கள் பிள்ளையைப் பார்த்து முதலில் சொல்லுவோம். சிவப்பைத் தாரும் பின்னர் சொல்லுவோம் நீலத்தைத் தாரும்.

### மூன்றும்படி

பொருளுக்குரிய பெயரை ஞாபகத்தில் வைத்தல். பிள்ளையிடம் பொருளைக்காட்டி இது என்ன நிறம் என்று கேட்போம் பிள்ளை இது சிவப்பென்று கூறவேண்டும்,

ஆசிரியர் சூழலின் காவலராகவும், பொறுப்பாளராகவும் இருக்க வேண்டும். ஒரு வீட்டில் கவர்ச்சி, அதன் சுத்தத்திலும் ஒழுங்கிலும் உள்ளது. எல்லாப்பொருளும்அவற்றிற்குரிய இடங்களில் துடைக்கப்பட்டு, பிரகாசமாக, மங்களமாகஇருத்தலேஅழகு. இது ஆசிரியரின் முதல் எண்ணமாக அமையவேண்டும். பாடசாலையில் ஆசிரியர் வேறு விதமாக இயங்கக் கூடாது. எல்லா உபகரணங்களும் அவற்றுக்குரிய இடங்களில் ஒழுங்காகவும் சுத்தமாகவும் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். எதுவும் இல்லாமல் இருக்கக்கூடாது. எப்போதும் மாணவருக்கு ‘வை புதிதாக தோற்றமளிப்பவையாகபூரணமானவையாகவும் உபயோகிக்கும் நிலையில் உள்ளவையாகவும் இருக்கவேண்டும் இவ்வகையில் ஆசிரியரும் அழகாகத் தோற்றமளிப்பவராகவும், சுத்தம் அமைதிகண்ணியம் உடையவராகவும், கவரக்கூடிய ஆளுமையுடையவராகவும் இருக்கவேண்டும். ஆசிரியரது தோற்றம் பிள்ளையின் மதிப்பையும், நம்பிக்கை

[5-ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

## செம்மண் நிலங்களில் கட்டிடங்களைக் குறைக்கவும்

தங்கள் 13-5-82 ‘ஈழநாடு’ இதழில் வெளிவந்த யாழ். மாவட்ட காய்கறி உற்பத்திகளைச் சந்தைப்படுத்துதல் என்னும் தலைப்பில் திரு. த. மார்க்கண்டு கூறிய யோசனைகள் சாலப் பொருத்தமானதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

எனினும் இவ் வமைப்பு வெற்றிகரமாகஇயங்கவேண்டுமெனில் எங்கள் மத்தியில் உள்ள காய்கறி உற்பத்திக்கு உகந்த செம்மண் பூமிகளில் கட்டிடங்கள் அமைத்தலைக் குறைத்தல்வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மாடிக் கட்டிடங்களை நிர்மாணிக்கலாம். அத்துடன் மழை நீர் கடலுக்குச் செல்வதைத் தடுத்து ஆங்காங்கே சேமித்தல் வேண்டும். இந்த அடிப்படைக் காரணங்களைக்கவனித்தால் உற்பத்தி பெருகுமென்பது எங்கள் அபிப்பிராயம்.

**க. கனகராசா ஜே. பி.**
யாழ்ப்பாணம்.

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 10ம் திகதி

திங்கட்கிழமை

(24—5—82)

மேடம்: வாழ்க்கையில் செழிந் தளிப்பான நிலை தென்படும். உடல் நலன் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும்.

இடபம்: அவசர முடிவின் மூலம் ஆபத்தைவிலைகொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி தோன்றும். அயலவர்களின் குறுக்கு வழித்தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும்.

மிதுனம்: வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். பொருள் வரவிற்கும் இடமுண்டு, மாணவர்க்கு கல்வியால் பெருமை வந்து சேரும்.

கடகம்: தொடங்கிய விடயம் பாதையில்தடைப்படும். இதனால் பொருள் விரயத்துக்கும் இடமேற்படாது உடல் நலக்குறைவு தோன்றும். சுகாதாரம் வேண்டும்.

சிங்கம்: பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். உறவினர்கள் உற்சாகமான வரவைக் கொடுப்பார்கள். இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம்.

கன்னி: சூழ்நிலையில் நல்ல மாறுதல்கள் தென்படும். அமைதியான வாழ்வுடன்தெய்வத்தின் அருளும் கிடைக்கும். தொழில் துறையிலும் பாராட்டுதல்கள் வந்து சேரும்.

துலாம்: முன்னேற்றப்பாதையில் தடைகள் பல தாக்கும். இருள் படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும். மின்னியல் பகுதியில் கடமையாற்றுவோர் கவனம் வேண்டும்

விருச்சிகம்; இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும். இல்லம் பல்கலைக் கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். நல்ல தினம்.

தனு: விஷப் பரீட்சையின் மூலம் விபரீதங்கள் நிகழலாம். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும். இன்று சும்மா இருப்பதே சுகம்,

மகரம்: உயர்ந்த எண்ணங்கள் புகழின் உச்சத்திற்கு உங்களை அழைத்துச் செல்லும். பிதாவழியால் நற்செய்தியும் கிடைக்கும். தெய்வ வழிபாட்டில் ஆர்வம் பிறக்கும்.

கும்பம்: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். மனதில் புதிய எண்ணம் வட்டமிடும் உல்லாசப்பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

மீனம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத்தொழில் முறைகளை மனம் நாடும். சகோதர வழியால் நன்மையும் வந்து சேரும் மகிழ்சிகரமான தினம்.

சோதிடக்கலாநிதி

**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## இளம்பெண் பயிற்சிமுகாம்

[மட்டக்களப்பு]

இலங்கை மகளிர் பணியகத்தினால் தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட படித்த இளம்பெண்கள் பயிற்சி முகாமில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. வகுப்புகள் தொடர்ந்து அடுத்தமாதம் ௨ம் திகதி வரை நடைபெறும். பயிற்சி முகாமில் தொழில், வைத்தியம், சுகாதாரம் மற்றும் முதலுதவி நிபுணர்கள் மொத்தம் 71 பேர் பயிற்சியளிப்பார்கள். கொடிகாமம் திருநாவுக்கரசு மடாலயத்தில் ஆரம்பமாகியுள்ள இப்பயிற்சி முகாமில் 65 படித்த இளம் பெண்கள் பயிற்சிபெற்று வருகிறார்கள் இலங்கை மகளிர் பணியக அத்தியட்சகர் திருமதி வனிதா விஜயசேகராவினால் இப்பயிற்சி முகாம் இருமாதங்களுக்கு முன் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

## இன்னிசை விருந்து

[துணுக்காய்]

பரந்தன் கலைவட்டத்தின் 2-வது ஆண்டு பௌர்ணமி கலைவிழா 6-ந் திகதி நடைபெறும் இவ்விழாவில் கரச்சி-வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த திரு. சிறிஸ்கந்தவேல் இன்னிசை விருந்தளிப்பார். (கு)

தங்க நகைகளுக்கும்
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

த பினன்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக் விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

த பினன்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

# இலங்கையர் அதிகரிப்பு; வருமானமும் கூடுதல்!

## அமெரிக்கப் புள்ளிவிபரம் கூறுகிறது

வாஷிங்டன். மே 23

அமெரிக்காவிலுள்ள இலங்கையரின் எண்ணிக்கை பத்து வருடங்களில் இருமடங்காக அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் 1980-ல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையரின் தொகை நூறுசத வீதத்தால் அதிகரித்துள்ளது.

1970-ல் இலங்கையரின் எண்ணிக்கை 4,500 ஆகும் 198 -ல் இத்தொகை 9,000 ஆக அதிகரித்திருக்கிறது. இது சம்பந்தமாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களில் வெளிவந்த தகவல்கள் வருமாறு:

அமெரிக்கப் பிரஜை ஒருவரின் சராசரி மாத வருமானம் 1,600 டாலராகும். [இலங்கை நாணயத்தின் படி 32,000 ரூபா] ஆனால் இலங்கையர் ஒருவரின் மாத வருமானம் இரண்டாயிரம் டாலராகும்.

அமெரிக்காவில் இருக்கும் இலங்கையர் பொதுவாக சுய வேலைவாய்ப்பிலேயே ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக் கழகங்கள் மற் மற்றும் தனியார் நிறுவனங்களில் சுமார் ஆயிரம் இலங்கையர் ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். ''ஸ்ரீலங்கன் எக்ஸ்பிரஸ்'' எனும் மாத வெளியீடும் இங்கிருந்து வெளிவருகிறது.

## அகில இலங்கை ரீதியிலான போட்டிகள்

[அரியாலை]

முள்ளியவளை மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தின் ஆதரவில் அகில இலங்கை ரீதியிலான 6 பேர்களைக் கொண்ட நொக்கவுட் கரபந்தாட்டப் போட்டியும், அகில இலங்கை ரீதியிலான பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டியும் முள்ளியவளை மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பொங்கல் திருநாளுக்கு முன் இருநாட்களும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியும், பரிசளிப்புவிழாவும் அடுத்த மாதம் 10-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

## சுவாமி பூவளவன் தொடர்ந்து பாதயாத்திரை

(வவனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 8-ம் திகதி பாத யாத்திரையை ஆரம்பித்த ஆன்மீகத் தலைவர் தமிழக அரசாங்கப் தெய்வீப் பிரதிநிதி பூவளவன் வவனியா வந்தடைந்த போது சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கச்சேரிச் சந்தியில் வைத்து சுவாமி பூவளவன் ஊர்வலமாக குடியிருப்பு பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு. அங்கிருந்து கடைவீதிவழியாக சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

அகில உலக இந்து மாநாட்டுக்கு தமிழகப் பிரதிநிதியாக வந்த பூவளவன், யாழ். நகரிலிருந்து கொழும்புக்கு பாத யாத்திரை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 38 வயதுடைய பூவளவன், ஒரு விஞ்ஞான பட்டதாரி, தண்ணீர் மட்டுமே அருந்திக் கொண்டு இப்பாத யாத்திரையை மேற்கொள்கின்றார். கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தை அடைந்ததும், பாத யாத்திரை நிறைவுபெறும்.

இலங்கையில் பாத யாத்திரை முடித்த பின்னர் இவர் லண்டன் பயணமாகவுள்ளார். வவனியாவிலிருந்து கொழும்பு செல்லும்வரை இவருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

# சம்பவம்நடைபெற்றஇடத்தை ஜூரர்கள் பார்வையிட்டனர்

(வவனியா)

மாங்குளம் தேவராசா கொலை வழக்கு விசாரணையில் ஜூரர்கள் விடுத்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது.

1970ம் ஆண்டுஏப்ரல்மாதம் 6ம் திகதி சுட்டுக் கொலை செய்யப்பட்ட சின்னத்துரை தேவராசா கொலைவழக்கு, சிங்களம் பேசும் ஜூரிகள் முன்னிலையில் வவனியா மேல் நீதி மன்றத்தில் விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டது.

சாட்சி ஜோசப் தங்கராசாவின் குறுக்கு விசாரணையின் பின்னர் ஜூரர்களை நீதிபதி பார்த்து, சாட்சியிடம் கேள்வி கேட்க விரும்புகிறீர்களா என்று கேட்டபோது ஜூரர்மார் ஏகோபித்து, சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஜூரர்களை நீதிபதி அழைத்துச் செல்ல அனுமதி வழங்கினர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்புடன் நீதிபதி திரு. ரி. என். அபயவீரா, மற்றும் அரச சட்டத்தரணி ஹாஷா கபிலத், எதிரிதரப்பு சட்டத்தரணி கனக மனோகரன், எதிரி (சிறைக்காவலருடன்) முகமது அசனார் இஸ்மயில், உட்பட ஜூரிமார்களும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

வவனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற கொலைவழக்குகளில் ஜூரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டது இதுவே முதல் தடவையாகும்.

ஜோசப் தங்கராசாவின் சாட்சியத்தில் 23 முரண்பாடுகள் உள்ளதாக எதிரி தரப்பு சட்டத்தரணி கனகமனோகரன் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார். விசாரணை இன்றுமீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்ற வளவில் பெருந்திரளான மக்கள் கூடி நின்றனர்.

## ஆசிரியருக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யையும் பெற்றுத்தரும் முதற்படியாகும். ஆசிரியரது ஒவ்வொரு செய்கையும்பிள்ளைக்கு முன் மாதிரியான அமைப்பாகும்.

### பிள்ளையின் ஆர்வம்

இறுதியாக பிள்ளை ஏதோ ஒன்றில் ஆர்வம் காட்டும் காலம் வரும். வழமையாக இது வாழ்க்கைக்கேற்ற அப்பியாசங்களாக அமையலாம். உணர்வுப் பயிற்சி உபகரணங்களையோ பிள்ளைக்கு அவர்கள் சுவை மூலம் பயன்பெறும் காலம் வருமுன்னர் கொடுப்பது பயனற்றது மட்டுமல்லாமல் தீமையானது என்பதும் அநுபவாயிலாகக் கண்ட உண்மை. இவற்றை அறிமுகப்படுத்த முன்னர் பிள்ளையின் ஆர்வம் ஏதேனும் ஒன்றில் ஈடுபடும் வரை காத்திருக்கவேண்டு. பிள்ளை ஆர்வம் காட்டத் தொடங்கிய பின் ஆசிரியர் தலையிடக் கூடாது. ஏனெனில் இந்த ஆர்வம் இயற்கை விதிகளுக்கு அமைந்து பிள்ளையின்வாழ்வில் வேறுபல தொழிற்பாடுகளுக்கு வழிஅமைக்கிறது. ஆசிரியருக்கு வெற்றியைத்தரும் பெரிய கோட்பாடு இதுதான். பிள்ளையின் ஆர்வம் செயற்படத் தொடங்கியவுடன் பிள்ளை யென்ற ஒன்றை மறந்து செயல்படுவர்.

பிள்ளைகளுக்காசச் சேவை செய்தல் உலகத்திற்கு சேவை செய்யுப் உணர்வை ஏற்படுத்தும். முதலில் ஆசிரியர் சொல்லுவார் நான் பிள்ளையை அவனது உண்மை நிலையில் கண்டேன். நான் எதிர்பார்த்ததை விட மிகச் சிறந்தவனாக இருந்தான். இப்படி மாறிய ஒரு ஆசிரியர் பெற்ற வெற்றியின் அறிகுறியென்ன?

பிள்ளைகளுக்கு இப்போது நான் ஒருவன் இருக்கிறேன் என்ற எண்ணமே இல்லாது தொழிற்படுகிறார்கள் என்று ஆசிரியர் சொல்வதே அவ் வெற்றியின் அடையாளம் ஆகும்.

இன்றைய நம்நாட்டில் செவ்வக்குழந்தைகளே நாளைய சிறந்த பிரஜைகள்.

## வட்டு. தியாகர் அஞ்சலிக் கூட்டம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் கலாநிதி ஆ. தியாகராசாவின் நினைவாஞ்சலிக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் மற்றும் பல அரசியல், சமூக, சமயப் பெரியார்களும் உரையாற்றுவர். ஆலயங்களில் விசேட பூசைகளும், வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு அன்ன தானமும் வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை தியாகராசா ஞாபகார்த்தக் குழு ஒழுங்குசெய்துள்ளது. (அ)

# "ரியூட்டரி யுகமாகக் காலம் மாறிவிட்டது"

## தொடர்பகத் திறப்பு விழாவில்

### செல்வரத்தினம் அடிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

''புதிய பிரச்சினைகளும் புதிய சாவல்களும் எழுந்து கொண்டேயுள்ளன. இச்சவால்களைச் சந்திப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். இக்கடமையையும் பொறுப்பையும் ஏற்று நாமும் சிந்தித்தோம் அதன் விளைவே யாழ். நகரில் புதிதாகத் தோன்றியுள்ள 'தொடர்பகம்' என்று வண. பிதா சா. ம. செல்வரத்தினம் அடிகளார், யாழ். ஆஸ்பத்திரிவீதியில் அமைக்கப்பட்டுள்ள 'தொடர்பகம்' கட்டிடத் திறப்புவிழாவில் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

இத்தொடர்பகத் கட்டிடம் சுமார் 17 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையும், தொடர்பக அதிபர் வண எச். வேநாயகம் அடிகளாரும் இயக்குநர் வண எஸ். ஈ. விஜயரத்தினம் அடிகளாரும் குத்துவிளக்கேற்றினர்.

அமல உற்பவகுருமார் புனிதவளனுர் அ. ம. தியாகிகள் குருமடமாணவர்கள் வழிபாடு நிகழ்த்தினர்.

அதி வந் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்பகத்தை ஆசீர்வதித்தார்.

வண. செல்வரத்தினம் அடிகள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லாது தியேட்டர்களுக்குச் சென்ற காலம் மாறி இன்று பாடசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லாது 'ரியூட்டரி'களுக்குச் செல்லுகிறுர்கள். இன்றைய மாணவ மாணவிகள். கிராமங்களிலிருந்து வண்டில்கட்டி வந்து 'சினிமா' பார்த்த யுகம் மாறி, கிராமங்களில் இருந்து நகரங்கள், பட்டினங்கள் வந்து வீடுகளில் வாடகைக்குத் குடியிருந்து 'ரியூட்டரிகள்' செல்லும் யுகமாக இக்காலகட்டம் மாறியுள்ளது. இம் மாணவ மாணவிகள் அறிவைத் தேடி வருகிறுர்களா? அன்றேல் இது தான் இன்றைய நாகரிகம் என்று எண்ணுகிறுர்களா? அன்றேல் தொழில் நோக்கிக் கல்வி அமைய பணம் நோக்கி இக் கல்வியைத் தேடுகிறுர்களா? 'மொண்டசூரி' [பாலர் பாடசாலை யிலேயே ரியூஷன்' நாடும் இன்றைய ஈழத் தமிழ்த் தலைமுறையினரை யிட்டு நாம் சிந்தித்தே ஆக வேண்டும். இவர்கள் தேடும் கல்வி இவர்களின் சிந்தனையைத் தூண்டி அறிவை வளர்க்கின்றதா? அன்றேல் மந்தைப்போக்கான நெறிப்படுத்தலில் ஒரு குறுகிய வட்டத்துள் இவர்கள் வளர்க்கப்படுகிறுர்களா?

கற்கசடறக்கற்கபவைகற்ற பின் நிற்கஅதற்குத்தக' என்ற குறளின் அடிப்படையில் இவர்களுடைய கல்வி இவர்களுடைய இன்றைய வாழ்க்கைக்குப் பயன்படுகின்றதா? எதிர்கால வாழ்க்கையை நல்ல முறையில் வாழ இவர்களைத் தேடிவரும் இக்கல்வி வழியமைக்கின்றதா? அன்றேல் 'கற்க அளவோடு, கற்றபின் பரீட்சையோடு நிற்க என்ற நிதியில் இக் கல்வி அமைகின்றதா? தொழில் நோக்கிக் கற்கும் கல்வி தொழில் கிடைக்காத பட்சத்தில் எவ்வளவு விரக்தியையும் ஏமாற்றத்தையும் கொண்டுவரக்கூடியது? இவை புதிய பிரச்சனைகள் புதிய சவால்கள்.

#### வீடியோவின் தாக்கம்

'வீடியோவும், தொலைக்காட்சியும் இணைந்து மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. மனிதனின் இரு முக்கிய புலன்களை (பார்வை, கேள்வி) ஒரே நேரத்தில் ஈர்க்கும் இத் தொடர்பு சாதனங்களின் பண்புகளை மக்கள் உணர்ந்து கொண்டார்களா? இவற்றினூடாக ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளிஞல் ஏற்படும் நெடுங்காலத் தாக்கங்களை மக்கள் புரிந்து கொண்டார்களா?

#### அரசியல் சதுரங்கம்

விடுதலை இயக்கங்கள் குறுகிய காலத்தில் அரசியல் கட்சிகளாக மாறுவதும், புதிய இயக்கங்கள் பழைய விடுதலைக் கோஷங்களுடன் அரசியல் அரங்கேற்றம் நடத்துவதும், இன்று அரசியல் பழக்கங்கள் ஆகின்றன.

இவர்களுக்கிடையில்அவதிப்படும் மக்கள், பழக்கப்பட்ட அதே அடிமை வாழ்வில் நின்று தடுமாறுகிறுர்கள், விரக்தி அடைகிறுர்கள். வீடுதலைத் தலைவர்களின் ஆவேசப் பேச்சுக்களைக் கேட்டு அவசரமாகச் செயற்பட முனைந்த இளைஞர்கள் சிறைகளில் சித்திரவதைப் பட்டு வாடுகிறுர்கள்.

#### வளர்ச்சிகளின் விளைவு

விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, தொழில்துறை வளர்ச்சி முதலானவற்றிஞல் சமூக வாழ்க்கையில் ஏற்பட்ட புதிய வாழ்க்கையின் வேகம் வெளிநாடுகள் சென்று திரும்புவோரின் வாழ்க்கைமுறை வெளிநாட்டுப் பொருட்கள் அதுவும் குறிப்பாக மின்சக்திப்பொருட்கள், சமூகத் தொடர்பு சாதனங்களும் அவற்றின் நிகழ்ச்சிகளும், உல்லாசப்பயணிகளின் உல்லாச வாழ்க்கைமுறை, உளவியல்கண்டு பிடிப்புகளின் எதிரொலிகள், மேல்நாட்டுத் திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், நூல்கள், சஞ்சிகைகள் இவற்றின் பிரதிபலிப்புக்களாகத் தோன்றும் தமிழ்நாட்டுத் திரைப்படங்கள், சஞ்சிகைகள், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் போன்ற அனைத்தும் சேர்ந்து இங்கு வாழ் மக்களின் உளவியல் வளர்ச்சியைப் பல கோணங்களில் பாதித்துள்ளன.

மேற்கூறிய பல்வேறு தாக்கங்களில் இருந்தும் பல்வேறு விளைவுகள் உண்டு. இவை அனைத்தும் சேர்ந்து மக்களை முழுமனிதர்களாக வாழ வழிவகுக்கின்றனவா? அவர்களைச் சுயமாகச் சிந்திக்கத் தூண்டி அவர்கள் தமக்கென ஒரு வாழ்க்கையை அமைக்க இவை உதவுகின்றனவா? அன்றேல், மேல்நாடுகளிலிருப்பது போன்று, இங்கும் புதிய பிரச்சனைகளை, புதிய வாழ்க்கைக் கண்ணேட்டங்களை, புதிய மதிப்பீடுகளை கொண்டுவருகின்றனவா?

#### சவால்களைச் சந்திப்போம்

புதிய பிரச்சனைகள் புதிய சவால்கள் எழுகின்றன. இச்சவால்களைச் சந்திப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். இக் கடமையையும் பொறுப்பையும் ஏற்று நாமும் சிந்தித்தோம். அதன்விளைவே- யாழ் நகரில் புதிதாகத் தோன்றியுள்ள 'தொடர்பகம்'

இத் 'தொடர்பக' த்தில் இப்புதிய சவால்களையிட்டு சிந்திப்போம், கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வோம், அவற்றின் அடிப்படையில் செயற்றிட்டங்கள் தீட்டுவோம், செயற்படுவோம். இந்தப் புதிய யுகத்தில் எழும் புதிய சவால்களைச் சந்தித்து ஆய்வுகள் செய்வேசம், கருத்தரங்குகள் நடத்துவோம், பயிற்சிகள் அளிப்போம் ஆம். புதிய தொடர்புகளை உருவாக்குவோம், உறவுகளை வளர்ப்போம்.

# நான்கு இடங்களில் சாதனை!

(கரவெட்டி)

உடுப்பிட்டி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 'பியவர' கல்விச் சேவை வானெலி ஒலிபரப்பு நிகழ்ச்சித் திட்டப்போட்டியில் கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி நாலு இடங்களில் முதல் இடங்களைப் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டி முடிவுகள் வருமாறு.

இசை: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். (கவிதை) கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. பேச்சு: கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சிறுகதை: கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி திரு. இருதயக் கல்லூரி, சிறிய நாடகம்: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பாரம்பரியப் பாட்டு-கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, கம்பர்மலைஅரசினர்பாடசாலை.

ஆசிரிய ஆசிரியைகளுக்கான அமைப்புக் கலந்துரையாடல்: உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, கொற்றுவத்தை அ.மி.த.க பாடசாலை.

## சுன்னுகத்தில் பெந்தக்கோஸ்தே பெருவிழா

[அரியாலை]

சுன்னுகம் கிறீஸ்த சேவா ஆச்சிரமத்தில் பெந்தக்கோஸ்தே ஜெபவிழா இம்மாதம் 27-ந் திகதி தொடக்கம் 29-ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

தினமும் திருநற்கருணை ஆராதனை, வேதப் படிப்பு, செபக்குழுக்கள், பரிந்து பேசுதல், வாலிபர் கூட்டம், சுவிசேஷக்கூட்டம், காத்திருப்புக் கூட்டம் முதலான நிகழ்ச்சிகள் காலை முதல் இரவு வரை நடைபெறும்.

தினமும் நடைபெறும் சுவிசேஷக் கூட்டங்களில் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்திருக்கும் சாது செல்லப்பா அருளுரை நிகழ்த்துவார். [அ]

## பொங்கல்விழா

[சுழிபுரம்]

நெல்லியான் ஞான வைரவர் ஆலய வைகாசிப் பொங்கல் விழா செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறும் விழாவில் நாடகங்கள், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## நாவலர்மணிமண்டபத்தில் கந்தபுராணபடனம் தொடரும்

[யாழ்ப்பாணம்]

ஜூன் 5-ம் திகதி வைகாசி விசாக நாள் தொடக்கம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் கந்தபுராணப்படிப்புத் தொடர வேண்டுமென்று நல்லூர் நாவலர் நிலைய நிர்வாக உபகுழுக்கூட்டம் நேற்று நடைபெற்றபோது திரு. க. சரவணமுத்துவலியுறுத்திஞர். இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட குழுவினர், இதற்கான செலவுகளுக்கென நிதியையும் சேர்த்துக்கொண்டனர். கூட்டம் நிர்வாக உபகுழு தலைவர் திரு அ. ஜெ. செந்தில்நாதன் தலைமையில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றது.

நாவலர் சொத்துக்களை ஒரு நிலைப்படுத்தும் முயற்சியில் நாவலர் சபையோ உபகுழுவோ ஈடுபட்டு ஆவன செய்ய வேண்டுமென சைவப் பெரியார் திரு. மு. மயில்வாகனம், உபகுழுவின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

நல்லூர் முருகன் ஆலய திருவிழாக்காலத்தில் இதுவரை காலமும் செய்து வந்த மண்டகப்படியை மேலும்சிறப்பாகச் செய்வதற்கான வழி முறைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நாவலர் நிலையத்தை நிர்வகிப்பதற்கு மாதம் 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் தரக்கூடிய நிரந்தரநிதியத்தை உருவாக்குவது குறித்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இது விஷயம் கொழும்பிலுள்ள தலைமைப் பீடத்தின் அனுமதியுடனேயே முடிவு செய்யப்பட வேண்டுமென ஆலோசனை தெரிவிக்கப்பட்டது

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபைப்பணிப்பாளர் திரு. கா. வீசுவலிங்கம் நாவலர் நிலையத்தை நிர்வகிப்பது சம்பந்தமாக எடுத்து விளக்கிஞர்.

கொழும்பு. பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை கூட்டத்தில் மேற்படி விஷயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு ஆ. துரைராசசிங்கமும் இக்கூட்டத்தில் உரையாற்றிஞர். (மா)

## கிரிக்கட்: 2 பிரிவுகளிலும் பரி. யோவான் வெற்றி

(அரியாலை)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் யாழ். பரியோவான் கல்லூரிக்குமிடையில் பதினேழு வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் பரி யோவான் கல்லூரிக் கோஷ்டி 10 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

மானிப்பாய் இந்துக்கல்லூரிக் கோஷ்டி முதலாவது முறையாகத்துடுப்பெடுத்தாடி எல்லாவிக்கட்டுகளையும் இழந்து 100ஓட்டங்களைப் பெற்றது. இதனைத்தொடர்ந்து விளையாடிய பரி யோவான் கல்லூரிக் கோஷ்டி 3 விக்கட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த எஸ். கதிர்காமநாதன் 67 ஓட்டங்களையும் நிசாந்தனன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 81ஓட்டங்களைப் பெற்றது. இவர்களை எதிர்த்துப் பந்துவீசிய பி. திருக்குமார் 15 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளையும், எஸ். எஸ். ஆனல்ட் 3ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், இரண்டாவது ஆட்டத்தில் 25 ஓட்டங்களுக்கு 6விக்கட்டுகளையும் பெற்றனர்.

பரி. யோவான் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் விக்கட் எதனையும் இழக்காது 1 ஓட்டங்களைப்பெற்று தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

#### 15 வயதுக்கு உட்பட்டோர் போட்டி

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும், பரி, யோவான் கல்லூரிக்கு மிடையே நடைபெற்ற பதினைந்து வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியிலும் பரி. யோவான் கல்லூரிக்கோஷ்டி வெற்றியீட்டியது இனிங்சாலும் 119ஓட்டங்களாலும் பரி. யோவான் வெற்றிபெற்றது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி 2 விக்கட்டுகளை இழந்து218ஓட்டங்களைப் பெற்று தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இக் கோஷ்டியைச்சேர்ந்தசெல்வன்கள் கே. லோகேந்திரா, ஜி. ஆர். மரியநாயகம் ஆகியோர் முறையே 65, 60 ஓட்டங்களையும் செல்வன் ஜி. பி. ஜெயவீரசிங்கம் வெளியேருமலே 54 ஓட்டங்களையும் பெற்ருர்கள்.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கோஷ்டி தனது முதலாவது இரண்டாவது ஆட்டங்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 73,26 ஓட்டங்களைப் பெற்றது இவர்களை எதிர்த்துப்பந்து வீசிய பி. பார்த்திபன் 11 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், கே. அகிலன் 7ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், எஸ். சயந்தயோகன் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் பெற்றனர். (அ)

## நலன்புரிச்சங்க புதிய நிர்வாகிகள்

[பண்டத்தரிப்பு]

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்தின் 10-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. பா. பசுபதி தலைமையில் நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட புதுவருட நிர்வாகிகள் தெரிவு விபரம் பின்வருமாறு: போஷகர்: வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, தலைவர்: பி. அ. துரைரத்தினம், உபதலைவர்: வை. செந்திநாதன், செயலாளர்: செ. குமாரசிங்கம், உபசெயலாளர்: கா. குணசேகரம், பொருளாளர்: ச. நல்லையா. செயற்குழு உறுப்பினராக 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## மேற்றிராணியார் பட்டம்

(கரவெட்டி)

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அனுராதபுரம் மறைமாவட்டத்தின் புதிய மேற்றிராணியரரகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அதி.வண.ஹென்றி குணவர்த்தன அடிகளாருக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 10ம் திகதி மேற்றிராணியார் பட்டம் வழங்கவுள்ளது.

அனுராதபுரம் புனித சூசையப்பர் பேராலயத்தில் நடைபெறவுள்ள இப்பட்டாபிஷேக வைபவத்தை கொழும்பு, சிலாபம், யாழ்ப்பாண மேற்றிராணிமார்கள் நிறைவேற்றிவைப்பார்கள்.

பட்டாபிஷேக வைபவத்தில் அமைச்சர்கள், எம். பிக்கள், அரசியல், பிரமுகர்கள் உட்படப்பலர் கலந்துகொள்ளவிருக்கிறுர்கள்.

கடைசி வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-லதா
பல்லாண்டு வாழ்க

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
THUNDER BALL
28-5-82 முதல்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி
தர்மராஜா
(புத்தம்புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
பாக்கியராஜா
அஸ்வினி
ஒரு கை ஓசை
[ஈஸ்ட்மன் கலர்-புதிய பிரதி]

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
★ கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9-30

ஆயிரக்கணக்கான ரசிகர்களின் அன்புக்கு அடிமைகொண்டு திரை அரங்கு நிறைந்த காட்சிகளாக
ஸ்ரைல் நடிகர்
★ ரஜனிகாந்
★ விஜயன்
★ கராத்தே மணி
★ சுஜாதா
★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்...
10-30, 2-30, 6-15, 9-45
சாந்தி (யாழ்நகர்)
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின்
மற்றுமோர் வெற்றிப்படைப்பு!

தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளித்த விறுவிறுப்பு மிகு வண்ணத்திரையோவியம்
கமல் (இருவேடங்கள்)
சுஜாதா, சுமன்,
தேங்காய், நாகேஷ்.
கடல் மீன்கள்
தவிர்க்கமுடியாத காரணங்களால் காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படுவதால் ஆசனங்கட்கு முந்துங்கள்


போக்லண்ட் தீவுகளில்

# ஆர்ஜென்டீனு பீரங்கித் தாக்குதல்!

# 5000 பிரிட்டிஷ் வீரர் நிலை கொண்டனர்

லண்டன் மே 2

போக்லண்ட் தீவுகளில் 5000 பிரிட்டிஷ் படை வீரர்கள் நிலை கொண்டிருப்பதாகவும் இவற்றில் றேயல் கொமாண் டோக்களும் பரசூட் பிரிவினரும் அடங்குவர் என்றும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜோன்நொட் தெரிவித்தார்.

இப்படை வீரர்கள் போக்லண்ட் தீவுகளில் இறங்குவதற்கு எந்தவித இடையூறும் ஏற்படவில்லை. என்றும் பிரிட்டிஷ் வீரர்கள் அங்குள்ள ஆர்ஜென்டீனு வீரர்கள் இருக்கும் முகாம்களை நோக்கி முன்னேறுவதாகவும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது

இதேவேளை பிரிட்டனின் 8 போர் கப்பல்களையும் 5. யுத்த விமானங்களையும் தமது படைகள் நாசமாக்கியதாகவும் பிரிட்டிஷ் படைவீரர்கள் போக்லண்ட் தீவுகளில் இறங்கும் போது ஆர்ஜென்டீனு பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாகவும் ஆர்ஜென்டீனு அறிவித்துள்ளது. ஆனல் இக்கூற்றை பிரிட்டன் மறுத்துள்ளது. ஒரே ஒரு போர் விமானத்தை மட்டும் ஆர்ஜென்டீனு நாசப்படுத்தியதாகவும் போக்லண்டின் தலைநகரான போட்ஸ்ரான்லிக்கு அருகில் நிலைகொண்டிருந்த ஆர்ஜென்டீனு போர்கப்பலொன்றை பிரிட்டிஷ் போர் விமானமான 'ஹரியர்' நாசப்படுத்தியதாகவும் பிரிட்டன் அறிவித்துள்ளது.

போக்லண்ட் நெருக்கடி தீர்வுக்கு இருநாட்டு படைகளும் வாபஸ் பெற்று அங்கு இடைக்கால நிர்வாக அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று பெருநாடு தெரிவித்த யோசனையை பிரிட்டனும் ஆர்ஜென்டீனுவும் வரவேற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ. நா. செயலாளர் திரு பெடஸ்டீகியூலர் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் வலியுறுத்தியுள்ளது பிரான்ஸ் ஜனதிபதி திரு மெற்றிராண்டும் பாப்பரசரும் போக்லண்டில் உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று இருநாட்டுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [கு]

# "சிமெந்துத்தொழிற்சாலையால் அழியும் நிலையில் குடாநாடு'

-- சிங்கராயர் அடிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரார்த்தனை முடிந்ததும் விடுதலை அணியினர் ஊர்வலமாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடைந்தனர்.

வண. சிங்கராசா அடிகள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''நாங்கள் தேர்தலைவைத்து அரசியல் நடாத்தவில்லைதமிழ் மக்களின் அடிமைத்தனம் ஒழிக்க-லட்சியத்தை அடைய விடுதலை கோரியே சுதந்திரம் கேட்கிறோம். ஒரு கட்சி அரசியலை நடாத்தும் எண்ணம் எங்களுக்கில்லை. புற்றீசல் போல தாங்கள்தான் வீரர்கள் தியாகிகள் என்றுதங்களுக்குத் தாங்களே நாமம் சூட்டிக்கொண்டு வளர்த்துக் கொண்டு திரிபவர்களை நாங்கள் இனம் காணவேண்டும் உண்மையான சிந்தனை எங்கள் மத்தியில் வளரவேண்டும்.

''யார் பயங்கரவாதிகள்? தரப்படுத்தலால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களா? வெளிநாடுகளிலிருந்து மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவை இறக்குமதி செய்யப்படுவதன் தாக்கத்தினல் பெரு நஷ்டமடைந்த விவசாயிகளா?

ஒருநேர உணவுக்குக்கூட வழியில்லாமல் பட்டினிச்சாவிலிருக்கும் ஏழைமக்களா? வன்செயல்களால் உயிரிழந்தும் உடைமைகளை இழந்தும் இருப்பவர்களா?

''விடுதலைப் போராட்டத்தில் எப்பொழுது நாங்கள் பங்காளர்களாக மாறப்போகின்றோம்? விடுதலை வீட்டிலேயே உருவாக வேண்டும்; தொடர்ந்து கிராமிய மட்டத்துக்கு வந்து பட்டினம் நகரம் மாநகரத்துக்கு வருமளவுக்கு வரவேண்டும்.

''காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையால் எமது குடாநாடு அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

''தமிழ் மக்கள் வவனியா போன்ற பகுதிகளில் குடியேற வேண்டும். ஒவ்வொரு தமிழ் மகனின் வீட்டிலும் குறைந்தது ஒரு எலுமிச்சம் கன்றுவது - தென்னையாவது வளர்த்து எமது சுயதேவையைப் பூர்த்தி செய்யவேண்டும் அந்நியரின் பொருட்கள் எமது பிரதேசத்துக்குள் வருவதைத் தவிர்க்க வேண்டும்.

திருவாளர்கள்: ஈழவேந்தன் கோவை மகேசன், செர்ஜூர் ராசா, தேவதாஸ், பொன் பூலோகசுந்தரம் ஆகியோரும் பேசினர். (மா)

## புதுவருட நிர்வாகிகள்

(துணுக்காய்)

ஜனசக்தி விளையாட்டுக்கழக நடப்புவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யபட்டனர். தலைவர்: ச கந்தசாமி, உபதலைவர் க. சைவஇறைமணி, செயலாளர்: த. அசோகசீலன், உப செயலாளர், க. சுப்பிரமணியம், பொருளாளர், ப. தர்சன், 4 பேர் கொண்ட நிர்வாக சபையும், தெரிவு செய்யப் பட்டது.

★ ★ ★

கரச்சி வடக்கு ப. நோ. கூ. ச, புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. பாலசுந்தரம், உபதலைவர்: கி ஆழ்வாப்பிள்ளை செயலாளர்: செ. சோமசுந்தரம், உபசெயலாளர்: சி. இராசதுரை, பொருளாளர்: செல்வி வை. கனகம் மா 6பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய் செய்யப்பட்டது. (கு)


இன்று மட்டும்
றீகல் [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
ரிஷிமூலம்
(கலர்—புதிய பிரதி)


## பேராதனை மாணவர் பகிஷ்கரிப்பு நீடிப்பு

(கண்டி)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் வெள்ளிக்கிழமையிலிருந்து வகுப்புகளை பகிஷ்கரித்து வருகின்றனர் பகிஷ்கரிப்பு இன்னும் தொடரலாம் எனத் தெரியவருசிறது.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பேராதனை பல்கலைக்கழகத்தைக் கடந்து காரில் சென்ற போது பிரதமரை கேலி செய்ததாகவும் இதனைத் தொடர்ந்தும் ஐந்து மாணவர்கள் இடை நிறுத்தப்பட்டதாகவும் இதுவே பகிஷ்கரிப்புக்குக்காரணம் என்றும் தெரியவருகிறது.

பல்கலைக்கழகத்தைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் பாதுகாப்பால் மாணவர்களுக்கு எந்தவித இடையூறும் இல்லை என்றும் அங்கு அமைதி நிலவுவதாகவும் உதவி பொலிஸ் மா அதிபர் திரு. பிராங்க் சில்வா தெரிவித்தார். (கு)

## பொங்கல் விழா

[துணுக்காய்]

துணுக்காய் வன்னிவிழாங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பொங்கல் உற்சவம் 4-ம்திகதியும் - முல்லைத்தீவு வற்றுப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் 7-ம் திகதியும் நடைபெறும்.

சாவகச்சேரியில்

## ஏக்கர் வரி கட்டாதவர் மீது வழக்கு

(மட்டுவில்)

சாவகச்சேரிப் பகுதியில் நெல்வயல் நிலங்களுக்கு ஏக்கர் வரி கட்டாத விவசாயிகள் மீது சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதலில் வரணிப்பகுதி வயல்நிலங்களின் ஏக்கர் வரி கட்டாத விவசாயிகள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. [அ]

## விபத்தில் காயம்

(மன்னர்)

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் விபத்துக்குள்ளானதில் இருவரும் அனுராதபுரம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னர் - தள்ளாடியில் நிகழ்ந்த விபத்தில் அடம்பனைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை, ஆலங்குளத்தைச் சேர்ந்த றெபேர்ட் ஆகிய இருவருமே பலத்த காயங்களுக்குள்ளானவர்கள்.

# மரண அறிவித்தல்

## த. சுரேந்திரன்

சுரேந்திரன் [சுட்டி] ஜெர்மனியில் அகாலமரணமானார். இவர் திரு. செ. தர்மலிங்கம், திருமதி சந்ரா தர்மலிங்கத்தின் மகனும், ராஜன் [UK], கீத்தா[UK], சாந்தன் [பரியோவான் கல்லூரி], ஜனகன் [வெஸ்லி கல்லூரி] ஆகியோரின் சகோதரனும், சந்ரன் [UK] மைத்துனனும், திருமதி புஷ்பா சொலமனின் பேரனுமாவார். நாளை [25-ம் திகதி] மாலை 4 மணிக்கு புஷ்பவனம், நுணுவில் இல்லத்திலிருந்து சாவகச்சேரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். 3292

# மரண அறிவித்தல்

## திரு. கு. தருமராசா

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர் திரு. கு. தருமராசா லெசெத்தோவில் [தென் ஆபிரிக்கா] 12-5-82ல் காலமானார். அவரது ஈமக்கிரியைகள் கரணவாய் வடக்கு எள்ளங்குளம் மயானத்தில் இன்று [24-5-82] திங்கட்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நடைபெறும்.

குடும்பத்தினர்

நவிண்டில்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி. 3298

# மரண அறிவித்தல்

## கட்டுடை சோதிநாதர் நாகலிங்கம்

Dr. சோதிநாதர் நாகலிங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக்கணவரும், மகேஸ்வரன் பெருந்தெருத்திணைக்களம், சமுகநாதன் ஆஸ்பத்திரி கொழும்பு, Dr. முருகானந்தன் லண்டன், லிங்கேஸ்வரி ஆசிரியை சென். மைக்கலஸ் கொள்ளுப்பிட்டி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனும், மங்களேஸ்வரி, மணிமேகலை, திரவியம், ஆனந்தவடிவேல், சிருலியோன், சந்திரமௌலீசன் நைஜீரியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 24-5-82 இன்று மாலை 4 மணிக்கு கட்டுடையில் நடைபெறும். 3297

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் வல்லிபுரம்

நாகம்மாவின் அன்புக்கணவரும், எம். வி. தியாகராஜா [பிறவுன்ஸ் குறூப்], நாகரத்தினம், ரத்னபூபதி, செல்வரத்தினம், ஜெகநாதன் [ABM], சண்முகநாதன் [கனடா], ஜெகதாம்பிகை, நுசிலா [அட்டன்நெஷனல் வங்கி], ரவிந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கேஸ்வரி, கனகசபாபதி, பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி, பிரான்சிஸ்ரா, விஜயலட்சுமி, தெய்வேந்திரராஜன், காசிநாதன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் பழைய புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள அன்னாரின் வீட்டிலிருந்து நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

3299

# மரண அறிவித்தல்

## ஆசிரியை செல்லத்தம்பி இராசம்மா

ஆசிரியை செல்லத்தம்பி இராசம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலவிதானையார் தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற பசுபதி செல்லத்தம்பி அவர்களின் அருமை மனைவியும், அல்லைப்பிட்டி பிரபல வர்த்தகர் செல்லத்துரை, முன்னைநாள் பரியோவான் கல்லூரி ஆசிரியர் அருமைநாயகம், முன்னாள் ஆசிரியை ஞானம் லூயிஸ், வைத்திய கலாநிதி செல்வநாயகம் ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேஸ்வரி, மகேஸ்வரி அம்மா, காலஞ்சென்ற டேவிட் லூயிஸ், கமல் ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற சிங்கப்பூர் பென்சனியர் தம்பிராசாவின் அன்புச்சகோதரியும், சுண்டிக்குளி முன்னைநாள் அதிபர் கலாநிதி முத்தம்மா தில்லையம்பலத்தின் பேரன்புச் சகோதரியும், முன்னைநாள் அல்லைப்பிட்டி உடையார் கணபதிப்பிள்ளை, மணியகாரன் தில்லையம்பலம் ஆகியோரின் பெருமகளுமாவார். அன்னாரது ஈமக்கிரியை இன்று 24-5-82 மாலை 3 மணியளவில் அல்லைப்பிட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். 3206


# நுணுவில் இளைஞர் மே. ஜெர்மனியில் பலி!

## ஒருவர் படுகாயம்

(மட்டுவில்)

மேற்கு ஜெர்மனியில் ஏற்பட்ட மோட்டார் விபத்து ஒன்றில் சிக்கிய இரு இலங்கை வாலிபர்களில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். மற்றவர் ஆபத்தான நிலையில் மேற்கு ஜெர்மன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நுணுவில் மேற்கைச் சேர்ந்த சுட்டி என்று அழைக்கப்படும் சுரேந்திரன் தர்மலிங்கம் என்ற 23 வயது வாலிபரே ஸ்தலத்தில் மரணமானவராவார். ஞானி என்பவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் வாகனமொன்றில் அதிகாலையில் பிரயாணம் செய்தபோது, பனிக்கட்டி சறுக்கியதைத் தொடர்ந்தே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரியவந்தது. இறந்தவரின் சடலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது.

## இராணுவ ஜீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிக் கொண்டிருந்த ஜீப், ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக லொறி ஒன்றை விலகிச் செல்லும் பொழுது மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

கிளிநொச்சிப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்! (மா)

## பொதுத் தேர்தலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்திற்கென இந் நிதியிலிருந்து 20ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது. இதனைத் தட்டிக் கேட்க அமைச்சர்கள் தேவநாயகம், இராசதுரை ஆகியோருக்கு துணிவு இல்லை!

''1977ம் ஆண்டு விட்ட தவறுகளை இனிமேல் விடப்போவதில்லை என்ற முடிவுக்கு பொதுமக்கள் வந்துவிட்டனர். இந்நிலையில் மீண்டும் எமது அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறப்போகின்றது என்பது உறுதியாகிவிட்டது. நாங்கள் ஆட்சிபீடம் ஏறினுல் நிச்சயம், பறிக்கப்பட்ட உணவுக் கூப்பன்களை மீண்டும் வழங்குவோம். அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை பழைய விலைக்கு கொண்டுவருவோம். பொது வேலைநிறுத்தத்தில் வேலை இழந்த அனைவருக்கும் மீண்டும் வேலை வழங்குவோம்.

''தமிழ் மக்களின் பிரச்னைகளை நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தீர்த்துவைப்பேன் என்று இன்றைய ஜனதிபதி வடக்கு கிழக்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களில் கூறிவந்தார். ஆனுல் எமது அரசாங்கத்தைவிட இன்றைய அரசாங்கத்தில்தான் தமிழ் மக்களின் பிரச்னைகள் அதிகரித்துவிட்டன''

முன்னாள் அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்ன பேசுகையில் குடியியல் உரிமை பறிக்கப்படும் நிலைக்கு எந்தவிதமான துஷ்பிரயோகமோ, மோசடி ஊழல்களோ புரியவில்லை. இது திட்டமிட்ட பழிவாங்கும் செயல் என்ருர்.

முன்னாள் பிரதி அமைச்சர் ஜனப் எம். எம். முஸ்தபா பேசுகையில்; இந்த இனவாத அரசாங்கத்தை பதவியிலிருந்து விரட்டியடிக்க எமது கட்சியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணைந்து தேசிய ரீதியில் போராட முன்வர வேண்டும் என்ருர்.

மட்டக்களப்பு முன்னாள் மாவட்ட அரசியல் அதிகாரி திரு. இராஜன் செல்வநாயகம், நுவரெலியா எம். பி. திரு. அநுரா பண்டாரநாயகா உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்கள். [உ]

ஈவினை ரூ. 68,000 கொள்ளை:

# ஒருவர் கைது; காரும் கைப்பற்றப்பட்டது

[யாழ்ப்பாணம்]

ஈவினையில் நடைபெற்ற 68,000 ரூபா கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின்மீது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக் கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் காரையும் சுன்னுகம் பொலிசார் கைப்பற்றியுள்ளதுடன், காரின் உரிமையாளரும், அக் காருடைய நிறத்தை மாற்றிக் கொண்டிருந்தவர் எனக் கருதப்படுபவரும் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஈவினையைச் சேர்ந்த ராசரத்தினம் என்பவரது வீட்டில் ஐந்து இளைஞர்கள் பயங்கர ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி, 68 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளை அடித்துச் சென்றது தெரிந்ததே.

சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பொன் சுகுணேந்திரனுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில், சப் இன்ஸ்பெக்டர் பெர்னுண்டோ, சார்ஜன்ட்டுகளான பொன். பரமானந்தன், சேனரத், பொலிஸ் கன்ஸ்டபிள்கள் எஸ். கந்தசாமி, பி. டி. போவத்த ஆகியோர் சந்தேகத்தின் பேரில் மேற்குறிப்பிட்ட நபர்களை கைது செய்தனர்.

கொள்ளை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட நபர், மல்லாகம் மாவட்ட நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, அடையாளம் காண்பதற்காக, றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## தேடப்பட்டவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் இரகசியப்பொலிசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

அதைத்தொடர்ந்து நிந்தாவூரைச்சேர்ந்த தம்பிலெவ்வை முகம்மது ரிபாய், சிமித் என்றழைக்கப்படும் மகேந்திரநாதன் ஆகிய இருவரும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்பின் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

டாக்டரின் மனைவியும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இம்மரணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட காரையும், சில தடயப்பொருட்களையும்பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சட்டத்தரணி ஆர். ஜி. சபாரத்தினம் மூலம் சரணடைந்த டாக்டர் கெங்காதரன் யாழ். மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்புபகுதி பொறுப்பதிகாரி, திரு. கிருஷ்ணதாசன் யாழ். நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

நீதவான், அவரை இம்மாதம் 31-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். [மா]

## சு. க. தலைவர் கனடா பயணம்

[யாழ்ப்பாணம்]

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி வ. நவரத்தினம் வெள்ளிக்கிழமை கனடாவுக்கு பயணமானர்.

கனடா, அமெரிக்கா, ஜேர்மன் போன்ற இடங்களில் சுற்றுலா மேற்கொண்டு சுமார் ஐந்து மாதங்கள் வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இவர், லண்டனில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் கருத்தரங்குகளிலும் பங்குபற்றவுள்ளார். அண்மையில் கரவெட்டியில் நடந்த பல இயக்கங்கள் கூடிய கருத்தரங்கில மேற்படி லண்டன் விஜயம் பற்றியும் திரு. நவரத்தினம் குறிப்பிட்டிருந்தார். (வண்-நிரு)

## 'பாட்மின்டன்' போட்டி

யாழ்ப்பாணம்]

மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை விளையாட்டுக் குழுவினர் இன்று மாலை யாழ். பாட்மின்டன் சங்கத்துடன் பாட்மின்டன் போட்டியில் ஈடுபடவுள்ளனர்.

இப்போட்டி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி உள்விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. [வெ]

## உருவப்பட...

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

இதனையொட்டி கலாநிதி வி. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நினைவு தினக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களான பொ. பாலசுந்தரம்பிள்ளை, என். பாலகிருஷ்ணன் ஆகியோர் நினைவுரையாற்றவுள்ளனர். [வெ]


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான

**ORION-12''** (T. V. BLACK and WHITE)

விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்

**விலை ரூபா 2100/-மட்டுமே**

எம்மிடம் உள்ள அவசர தேவையான மற்றைய பொருட்கள்

HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமை காரியாலயம்:
ஹோம் பிறுன்ஸ் லிமிட்
இல. 463, காலி வீதி,
கொழும்பு—3
தொலைபேசி; 58910

கிளை காரியாலயம்:
ஹோம் பிறுன்ஸ் லிமிட்
இல. 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8310


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே மீ 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.